| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>திரு.கணேசன்<br>த.பெ. திரு.சின்னையன் | அ.வ.எண். 3/2005 | 08.07.2025 |

<u>குறுக்கு விசாரணை</u>

1)எனக்கு என்ன தொழில் என்றால் விவசாயம். எனது சொந்த ஊர் என்ன என்றால் ஊட்டத்தூர். உபயவாதிகள் ஊட்டத்தூர் ஊரை சேர்ந்தவர்களா என்றால் ஆமாம். தங்கராசுக்கு ஊட்டத்தூர் கிராமத்தில் விவசாய நிலம் உள்ளதாக கூறியுள்ளேன் அதன் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. சங்கரன்பிள்ளை மகன் தான் பச்சைமுத்துவா என்றால் சரிதான்.

2) எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள கரை என்று குறிப்பிட்டுள்ளேன் என்ன கரை என்றால் கிணற்று மண்ணை கொட்டி கரையாக கட்டி வைத்துள்ளார்கள். மேற்படி கரைக்கு மேல்புறம் யார் நிலம் உள்ளது என்றால் தங்கராசு நிலம், கீழ்புறம் சங்கரன்பிள்ளை மகன் பச்சைமுத்து. மேற்படி சங்கரன்பிள்ளை ஆகியோரின் சர்வே எண், பட்டா எண் ஆகியவை தெரியுமா என்றால் தெரியாது.

3) எனக்கு வழக்கு விபரம் குறித்து எதுவும் தெரியாது என்றாலும், இவ்வழக்கில் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

08.07.2025